# கருணாநிதி, நெடுஞ்செழியன் பதவி துறப்பர்

Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 121

தொலைபேசி எண். 49
போன் 389

National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக வைகாசி 29 ரபீஉல் அவ்வல் 14 செவ்வாய்க்கிழமை (11-6-68)

## மற்றும் இருவரும் ராஜினமா செய்வர்

திருச்சி, ஜூன் 10 தமிழ்நாட்டில் ஆட்சிபீடத்திலுள்ள திராவிட முன்னேற்றக்கழக அமைச்சரவையைச்சேர்ந்த நான்கு அமைச்சர்கள் விரைவில் பதவி துறக்கவிருக்கிருர்கள்.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணநிதி, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சமூக நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து ஆகிய நான்கு பேருமே பதவி துறக்கவிருக்கும் அமைச்சர்களாவர்.

நால்வரும் விரைவில் தங்கள் பதவிகளைத் துறந்துவிட்டு திராவிட முன்னேற்றக்கழகத்தின் வேலைகளில் ஈடுபடப்போவதாகபொதுப்பணித்துறை அமைச்சர் திரு. கருணநிதியே திருச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

# "யாழ். மாநகரசபை தேர்தலை நடத்த ஆவனசெய்யுங்கள்"

## கவர்னர் ஜெனரலுக்கு வரியிறுப்பாளர்சங்கம்கோரிக்கை

### முன்னுள்மேயர் தலைமையில் நடந்தகூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாநகர சபையின் தற்போதைய விசேஷ ஆணையாளர் ஆட்சி சட்டபூர்வமானதில்லாததால் உடன் ஆணையாளர்கள் ஆட்சியை கலைத்துதேர்தலை நடாத்துமாறு கவர்னர் ஜெனரலையும் அட்டோனி ஜெனரலையும் ஆடிட்டர் ஜெனரலையும் கோருவதென்ற தீர்மானம் நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் வரியிறுப்பாளர்சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் முன்வீதியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தை திரு. நடராசா திறந்து வைத்தபின் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு முன்னுள் மேயர் திரு டி எஸ். துரைராஜா தலைமைவகித்தார்.

திரு டி.எஸ். துரைராஜா தமது தலைமையுரையில் இலங்கையில் முதல்தரமாக நடைபெற்றுவந்த யாழ்ப்பாணம் மாநகரசபைஆட்சி ரீதியில் அமைச்சர் தலைத்ததால் இன்றுஇது ஊழல் மிகுந்து காணப்படுகின்றதென்றும் தமிழ் மக்களுக்குள்ள ஒரே மாநகரசபையான யாழ்ப்பாண மாநகரசபையையே நடாத்தும் திறமை தமிழருக்கு இல்லை எனக் காரணங்காட்டி தேர்தலை நடத்தாதிருக்கும் போது தமிழ் மக்கள் ஆட்சி செலுத்தும் மாவட்டசபை ஏன் அமைக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் புதியமாக்கட் கட்டுவதற்கு பிரதமரை இங்கு அழைத்து அத்திபாரக்கல் நாட்டியதற்கு மட்டும்சுமார் 10 800 செலவிடப்பட்டதென்றும் இதில் தோரணம் கட்டுவதற்கு மட்டும் சுமார் 100 ரூபா தென்னோலை வெட்டச் செலவிடப்பட்டதென்றும்பொது மக்களின் பணத்தை இவ்வாறு அநாவசியமாக செலவிடுவது கண்டிக்கப்பட [illegible] மேலும் குறிப்பிட்டார்.

குருநகரில் வீட்டு வரிமை மாநகரசபைவிசேஷ ஆணையாளர்கள் கூட்டிய தால் கூட்டிவரி கொடா இயக்கம் ஒன்றை ஸ்தாபித்து அதனை நடத்தியதெனவும் இக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்னுள் செனட்டர் திரு ஜி. நல்லையா திரு மாட்டின் ஆகியோரும் பேசினர்கள்.

[கா, நி]

## "சம்பள முரண்பாட்டுச்சபை அறிக்கையை வெளியிடவும்"

### சுகாதாரஇலாகா ஊழியர்கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

"சுகாதார இலாகா சம்பள முரண்பாட்டுச் சபையின் அறிக்கையை உடனடியாக சகல சுகாதாரப் பகுதி தொழிற்சங்கங்களுக்கும் சுகாதார அமைச்சர் அனுப்பிவைத்து அவர்களின் அபிப்பிராயத்தைக்கோர வேண்டும்."

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றை தேசிய அரசாங்க சுகாதார சேவையாளர் சங்கம் சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

சுகாதார இலாகாவில் கடமையாற்றும் ஊழியர்களின் சம்பள விகிதம், அடிப்படைச் சம்பளம் ஆகியவற்றின்முரண்பாடுபற்றிஆராய கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது. இது தனது அறிக்கையை சுகாதார இலாகாவிடம் கையளித்து பல மாதம் ஆகிவிட்டது.

ஆனல் இது பற்றி எந்த முடிவையும் சுகாதார இலாகா இன்னமும் வெளியிடவில்லை. இருந்தபோதும் பத்திரிகைகளில் இது பற்றி பலவேறு விதமான கருத்துக்கள் வெளிவிடப்பட்டு வருகின்றன எனவே, சுகாதார இலாகா தொழிற்சங்கங்கள் இது பற்றி அறிந்து ஆராய்ந்து தமது கருத்தைத் தெரிவிக்க சந்தர்ப்பமளிக்குமுகமாக கமிஷனின் அறிக்கைப் பிரதிகள் தொழிற்சங்கங்களுக்கு உடன் அனுப்பி வைக்க வேண்டும்.

இம் மகஜரின் பிரதிகள் சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, சுகாதார சேவை அத்தியட்சகர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(கா, நி)

## 'இளைஞர் குற்றங்களை தடுக்க இளைஞரே முன்வாருங்கள்'

### பொலிஸ் சுப்ரீண்டன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்.

'இளைஞர்களிடையே அதிகரித்துவரும் குற்றங்களையும் காடைத்தனங்களையும் தடுக்க கிராமந்தோறும் ஜனசமூகநிலையங்களையும்கிராமமுன்னேற்ற சங்கங்களையும் அமைத்து தொண்டாற்று இளைஞர்களே முன்வரவேண்டும்.'

இவ்வாறு இந்து மகாசபை சனசமூகநிலைய புனருத்தாரணதிறப்பு விழாவை நடாத்தி வைத்துப் பேசுகையில் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட இந் நிலையத்தின் திறப்புவிழாவுக்கு திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா தலைமை வகித்தார்.

பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கம் இங்கு மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

அதிகரித்துவரும் குற்றங்களைத் தடுக்க பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவு அவசியம் இதற்காக கிராமங்கள் தோறும் அமைக்கப்படும் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்களுக்கு வாலிபர்கள் ஆதரவு கொடுக்க வேண்டும். இதற்கு முன்னோடியாக வாலிபர் சங்கங்களும் ஜனசமூக நிலையங்களும் எங்கும் நிலவுவது அவசியம். இதனுல் பொதுமக்களும் அறிவுள்ளவர்களாவதோடு நாடும் நாமும் முன்னேறலாம்

திரு. எம். பாலச்சந்திரன் ஆர். சி. மன்மதராஜன், சி. சி. சோமசேகரம், கே. எ. நவரட்ணம் ஆகியோரும் பேசினர்கள். திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் கோஷ்டியினரின் வில்லிசையும் செல்வி இராசலட்சுமி கனகசபாபதியின் இன்னிசையும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

[கா. நி]

## கடைஊழியர் நள்ளிரவில் கயிற்றில் தொங்கினர்

யாழ்ப்பாணம், செவ்.

பூட்டப்பட்டிருந்த தேநீர்க் கடையில் நள்ளிரவில கயிற்றில் தொங்கிக்கொண்டிருந்தார் வாலிபர் ஒருவர் அவரருகில்ஒரு காகிதத்துண்டையும் நச்சுதிராவகப் போத்தல் ஒன்றையும் கண்டெடுத்தனர் பொலிசார்.

இச்சம்பவம் திருநெல்வேலிச் சந்தியிலுள்ள தேநீர்க் கடையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது. இங்கு சர்வராகக் கடமையாற்றிய பி. இராமகிருஷ்ணன் என்ற25 வயது வாலிபரே கயிற்றில் தொங்கிய நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

கடையின் அறையில் இறந்துகிடந்த இவ்வாலிபரின் மரணம் பற்றி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கா. இராசநாயகம் மரண விசாரணை நடத்தினர். கோப்பாய் பொலிஸ் நிலைய சார்ஜண்ட் சின்னத்தம்பி சாட்சிகளை ஆஜர் செய்திருந்தார்.

இறந்தவருக்கருகில் கிடந்த காகிதத் துண்டில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"கொண்டுவந்தால் தந்தை; கொண்டுவந்தாலும் வராவிட்டாலும்தாய்; சீர்கொடுப்பாள் சகோதரி;

(6-ம் பக்கம்பார்க்க)

## 'கல்லூரிவளர்ச்சிக்கு உழைக்கும் ஆசிரியர்பெயர் நிலைக்கும்'

### 'வித்தியாலய மூவர்' பிரியாவிடை வைபவத்தில் ஹண்டிபேரின்பநாயகம்

யாழ்ப்பாணம, செவ்.

"ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு எந்த ஓர் ஆசிரியர் பாடுபடுகிருரோ அவரின் பெயர் என்றும் அழியாது நிலைத்து நிற்கும். சுயநலம் கொண்டிருக்கும் ஆசிரியர்களால் கல்வி வளரமாட்டாது. வைத்தீஸ்வர வித்தியாலய கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவரின் வளர்ச்சிக்கும் திரு. ச. அம்பிகைபாகன், திரு. கா. வைரமுத்து திரு. து. சீனிவாசகம் ஆகியோர் ஆற்றிய சேவை மகத்தானது; என்றும்மறக்க முடியாதது"

இவ்வாறு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பல வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், உப அதிபர் திரு. கா. வைரமுத்து, திரு. து. சீனிவாசகம் ஆகிய மூவருக்கும் பழைய மாணவர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசாரவைபவத்தில் கலந்து உரையாற்றிய திரு. ஹண்டி பேரின்பநாயகம் கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவபாதசுந்தரம்தலைமையில் நடைபெற்ற இவ்

[6-ம் பக்கம் பார்க்க]

**மணிவாக்கு**

இங்குள்ள எதுவும் உமக்குச் சொந்தமல்ல என்ற உண்மையை மறக்காதீர். நீங்கள் உள்ளிட்டு எல்லாமே இறைவனின் உடைமை. எனது எனது என்பது அகந்தையின் அறிகுறியே.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
[illegible] EELANAD Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389

சாதிவாரணம் கிலகவருஷம் வைகாசி மாதம் 29-ந்திகதி
(11-6-68)

## தி.மு.க. மந்திரி சபை மாறுதல்

தமிழ் நாட்டில் ஆட்சி பீடத்திலுள்ள திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கத்தின் நான்கு அமைச்சர்கள் தங்கள் மந்திரிப்பதவிகளை ராஜினாமாச்செய்துவிட்டுகட்சி வேலைகளைக் கவனிக்கப் போவதாக தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு மு.கருணாநிதி, திருச்சியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். தி.மு.க. அரசாங்கம் தமிழ் நாட்டில் ஆட்சிபீடத்துக்கு வந்து சுமார் ஒரு வருடகாலத்தின் பின் இதற்குள் கட்சிவேலைகளுக்காக நான்கு அமைச்சர்கள் தங்கள் பதவிகளைத் துறக்க வேண்டியது அவசியம் தானு.

கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், உணவு அமைச்சர் திரு. கே.ஏ.மதியழகன், சமூக நல அமைச்சர் திருமதி. சத்தியவாணிமுத்து, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.மு.கருணாநிதி ஆகிய நால்வரும் தான் மந்திரிப்பதவிகளைத் துறந்து கழகவேலைகளைக் கவனிக்கவிருக்கிறார்களாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்குப் பதவி பெரிதல்லவென்பதையும் மந்திரிப்பதவியிலிருந்தால்தான் வாழமுடியுமென்ற நிலை அவர்களுக்கில்லையென்பதையும் உணர்த்துவதும் இதன் நோக்கமாக இருக்கலாம். தேர்தல்காலத்தில்வாக்குறுதி அளித்ததற்கிணங்க, ருபாய்க்கு ஒருபடி அரிசித் திட்டம் கொண்டுவரப்படும்வரை சிலமாதங்களுக்கு தி.மு.க அமைச்சர்கள் சம்பளம்வாங்காமல் பணிபுரிந்தனர். அவர்களுக்காக பல இடங்களில் மக்கள் சேர்த்துக்கொடுத்த பணத்தையும் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. முதல் அமைச்சர் திரு. அண்ணாதுரை, அமைச்சரவையை அமைத்த போதே, தமது அமைச்சரவையிலுள்ளோர் சில காலத்தின்பின்னர் பதவி துறந்து நாட்டின் அபிவிருத்தி வேலைகளிலும் கழகத்தின் வேலைகளிலும் ஈடுபடுவார்கள் எனத் தெரிவித்திருந்தார். எனவே நான்கு மந்திரிகள் பதவிதுறந்து கழக வேலைகளைக் கவனிக்க விருப்பதாக திரு கருணாநிதி இப்போது தெரிவித்திருப்பது திடீரெனச்செய்யப்பட்ட ஒருமுடிவு அல்ல.

மந்திரிப்பதவியில் ஒருவரே பல வருடங்கள் நீடித்திருப்பதால் அவருக்கும் அலுப்பும் சலிப்பும் ஏற்படும். அவரது இலாகா ஊழியர்களுக்கும் அலுப்பு ஏற்பட்டு விடும். இதனால் அமைச்சின் வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெறுவது கஷ்டம். இதுதவிர ஒருவர் அமைச்சராக நீண்டகாலம் பதவி வகிப்பதால் அமைச்சில் ஊழல்கள் ஏற்படவும் அமைச்சரைப் பற்றி ஊழல் புகார்கள் கிளம்பவும் இடமேற்படும். அமைச்சரவையில் இடையிடையே மாற்றம் ஏற்படவேண்டும். அனுபவம் என்ற பெயரால் பழையவர்களுக்கே இடம் கொடுப்பதால் இளம் துடிப்புள்ளவர்களுக்கும் ஆற்றலுள்ளவர்களுக்கும் வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடுகிறது. ஓர் அமைச்சரை மற்றோர் அமைச்சுக்கு மாற்றுவதாலும் அமைச்சரவையில் புதிய தெம்பு ஏற்பட்டுவிட முடியாது. புதியவர்களை சுறுசுறுப்பும் ஆர்வமும், ஆற்றலுமுள்ளவர்களை அமைச்சரவையில் நியமிப்பதால் அரசாங்க ஊழியர்களும் உஷாராக இருப்பார்கள். நாடும் துரிதமாக முன்னேற்றப் பாதையில் செல்லும்.

தி. மு. க. அமைச்சரவையில் செய்யப்படவிருக்கும் இந்த மாறுதல் இன்னும் ஓர் இரண்டு வருடங்கள் கழிந்த பின் செய்யப்படுவதே பொருத்தமும் நல்லதுமாகும். பதவிக்கு வந்து ஒரு வருடத்துக்குள் பல காரியங்களைச் செய்து முடிப்பது சுலபமல்ல. அரசாங்கத்தின் கொள்கைதான் யார் வந்தாலும் அதை நிறைவேற்றுவார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் ஆட்களைப் பொறுத்திருக்கிறது அதன் வேகம். அவசரமாக அமைச்சரவையில் இப்போது மாறுதல் செய்வது அமைச்சராக இருப்பதற்கு அவர்கள் தகுதியல்ல. கட்சி வளர்ச்சிக்குத் தான் பொருத்தமானவர்கள் என்ற மாற்றுக்கட்சியினர் பேசுவதற்கு வாய்ப்பளிப்பதாகும். என்றாலும் பதவி பெரிதல்ல என்பதை உணர்த்தும் தி. மு. கழகத்தின் செயல் நமது நாட்டவரும் பின்பற்ற வேண்டிய நல்ல செயல்.

# 'தமிழ்மகன்மேல் பழிவாங்குவதை பார்த்துக்கொண்டிருக்கமுடியாது'

## பார்லிமெண்டிலும் வெளியேயும் இதற்காக வாதாடுவோம்

— உடுப்பிட்டி எம். பி.

## வடபகுதி கட்டுப்பாட்டைநீக்க வல்வெட்டித்துறையில் ஜி. ஜி. வற்புறுத்தல்

வல்வெட்டித்துறை, திங்கள்

'நான் எனது கடமையைச் செய்தேனே தவிர வேறெதுவும் கூடுதலாகச் செய்யவில்லை. கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 8-ந் திகதி வல்வெட்டித்துறையில் நடந்த சம்பவத்தில் நான் ஏதோ பெரிய காரியத்தைச் செய்துவிட்டேன் என இப்பகுதி மக்கள் நினைப்பது தவறு. அது எனது கடமை தமிழ் பாராளுமன்ற உறுப்பினன் என்ற காரணத்தால் இராணுவத்தினரோ, பொலிசாரோ, அல்லது வேறு யாராவது ஒரு தமிழ் மகன் மேல் பழி வாங்க நினைத்தால் நாம் அதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது தமிழன் எங்கு வாழ்ந்தாலும் அவனுக்கு ஏற்படும் இன்னல்களைப் பாதுகாத்துக் கொடுப்பது நமது கடமை, அரசாங்கம் அவசர காலச்சட்டத்தின் கீழ் யாழ். மக்களை பொருள் கட்டுப்பாடுச் சட்டத்தைக் கொண்டு கள்ளக் கடத்தல்குற்றவாளிகளாக்கி பழிவாங்கப் பார்க்கிறார்கள். இச்சட்டம் எந்த ஜனநாயக நாட்டிலும் காணமுடியாத சட்டம். இச்சட்டத்தை நீக்கும் வரை நாம் ஓயமாட்டோம். பாராளுமன்றத்திலும், வெளியேயும், அல்லது நீதிமன்றத்திலும் சரி இந்தச் சட்டத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்பதைச் சொல்லி வைக்க விரும்புகிறேன். உப சபாநாயகராகக் கடமையாற்றி வருவதனால் பாராளுமன்ற சம்பிரதாயத்தின்படி பல விஷயங்களும் பேச முடியாததையிட்டு கவலைப்படுகிறேன்.''

இவ்வாறு உப சபாநாயகரும் உடுப்பிட்டி எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் வல்வெட்டித்துறை ரேகுமைதானத்தில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வல்வை நெடியகாடுப் பிள்ளையார் கோவிலிலிருந்து ஆரம்பமான ஊர்வலத்தில் மேளக் கச்சேரி, வாணவேடிக்கை முதலியனவும் இடம் பெற்றன. சிதம்பராக் கல்லூரியில் இராப் போசன விருந்தொன்றும் அளிக்கப்பட்டது.

வல்வை பட்டினசபைத் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலுதலைமையில் நடைபெற்ற இவ் வரவேற்பில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

### 'ரத்து செய்ய வேண்டும்'

மாவட்டசபை மக்களை ஏமாற்றும் ஒரு பெரிய லட்டம் இந்தமாவட்ட சபையைப் பற்றி இன்று இவ் விஷயத்தில் பேசமுடியாதபடி உங்கள் ஊர்வலம் நேரத்தை எடுத்துவிட்டது.

வடபகுதி பொருள் கட்டுப்பாட்டுச்சட்டம் வடபகுதி மக்களை கள்ளக்கடத்தல் காரர்களாக்கியுள்ளது. முக்கியமாக இது வல்வை மக்களுக்கு அவமானம்தேடியுள்ளது. இச்சட்டத்தை உடனடியாக ரத்துசெய்ய வேண்டும்

மாவட்ட சபையைப்பற்றி எடுத்துக் கூறுவதற்கு விரைவில் இவ்விடயத்தில் ஒரு கூட்டம் வைத்து ஒழுங்கு செய்து தருமாறு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

பருத்தித்துறை பட்டின சபைத்தலைவர் திரு. என் நடராசா பேசுகையில் தமிழ் மக்கள் இன்று மொழியுரிமை, குடியுரிமை பிறப்புரிமை முதலியவற்றை இழந்து இருக்கிறார்கள் என்றார் திருவாளர்கள் கே. மேசதிலால்தேவ வீ. ஆனந்தசங்கரி சிறீதரன் முன்னாள் வல்வை பட்டின சபைத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் ஆகியோரும் பேசினர்.

இறுதியில் திரு. கே செல்வச்சந்திரன் நன்றியுரை கூறினார். இராப்போசன விருந்தில் திரு கே இரத்தினசிங்கம் நன்றியுரை கூறினார்.

## இன்றைய பலன்

[11 - 6 - 68]

வைகாசி மீ 29 உ

செவ்வாய்க்கிழமை

திதி- பிரதமை இரவு 11-51 மேல் துதியை.

நட்சத்திரம்- கேட்டை பகல் 7-56 மேல் மூலம்.

ராகுகாலம் - 2-52— 4-22.

சுபநேரம் - 10-22— 11-52

இன்று பிறந்தவர்களுக்கு— நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கைகொடுக்காத நிலையில் புதிதாக வந்தவர் உங்களுக்குத் துணை நிற்பார். புண்ணிய ஸ்தல யாத்திரைக்கு இடமுண்டு. பரோபகாரச் சிந்தையின் மூலம் நீங்கள் புகழ்ச்சொல்லுக்கு ஆளாகலாம். இருப்பிடமாற்றம் வரின் அது சிறப்பானதாகவிருக்கும். குழந்தைகளுக்குச் சில நூதன ரோகங்கள் தென்படலாம். வைத்தியசெலவுகளுக்காகக் கடன்பட நேரிடும். முதியவர்களாயின் வாய்வுப்பதார்த்தங்களைத் தவிர்க்கவும். வருமுன் காத்தல் சிறப்பானதாகும்.

மேஷம்- அறவழி நாட்டம், தாராளமனம்.

ரிஷபம்- ஆயுத பயம், அவசரம்வேண்டாம்.

மிதுனம்- தாம்பத்தியம் சிறக்கும், தனமும்சேரும்.

கடகம்- சிநேகிதர் பகை, சிந்தையில் குழப்பம்.

சிம்மம்- புண்ணிய விருப்பு, புதிய பாதை.

கன்னி- மனம்போல் வாழ்வு, மக்கள் ஆதரவு

துலாம்-ஆதாயம் பெருகும், புதுத்தொழில் நாட்டம்.

விருச்சிகம்- வேண்டாத சிந்தனை, பதட்டநிலை.

தனுசு- கோபப் பார்வை, கொள்கையில் கோணல்.

மகரம்- நிதியில் அபிவிருத்தி, நிம்மதி பிறக்கும்.

கும்பம்- குடும்பசுகைக் குறைவு. பிரிவுத்துயர்.

மீனம்- அன்னைமொழி அமிர்தம், அமைதியுடன் இரு.

— சோதிடக்கலாநிதி —

இருமலை வேலுப்பிள்ளை

## அம்மன் பொங்கல்

யாழ்ப்பாணம், செவ்.

இருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவிலின் வருடாந்தப் பொங்கல் நேற்றுமுன்தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## 'மதுர மணி'

'மதுரை மணி ஐயர் ராக ஆலாபனை செய்வது ஒரு தனிப்பாணி. மற்றவித்வான்கள் ஒரு ராகத்தை ஒரு முழு வட்டவடிவமாக ரூபித்துக் காண்பிப்பார்களானால் ஐயர் அவர்கள் அதை பல சிறிய முழுவட்டங்களால் கோர்க்கப்பட்ட ஒரு பெரிய முழுவட்டமாக சிருஷ்டிப்பார்'.

'கர்நாடகம்' என்ற புனை பெயரில் சங்கீத விமர்சனம் செய்த ஆசிரியர் 'கல்கி', மதுரை மணி ஐயரின் கச்சேரி ஒன்றை விமர்சிக்கும் போது இவ்வாறு கூறினார்.

பெரும் ரஸிகரான 'கல்கி' ஒருவருக்கே இவ்வாறு விமர்சனம் செய்யும் திறமை கிடைத்திருக்கும்.

மணி ஐயரின் ராக ஆலாபனை அழகானமையது. மற்றவர்கள் 'சரிகமபதநிஸரிக' என்று கீழிருந்து மேலே ஒரேயடியாக பிர்க்கா அடித்தால் அவர் 'சரிகம, ரிகமப, மபதநி, பதநிஸரி, என்று கோர்வையாக பிர்க்காக்களை தொடுப்பார்.

ஒரே நிறத்தில் மாலை அமைந்திருப்பதும் அழகுதான். ஆனால் பல வண்ண மலர்கள் அடுக்கடுக்காகக் கொண்ட மாலை அதைவிட அழகாயிருக்கும்.

ஒரு கலைஞனின் வெற்றி அவனுடைய தனித்தன்மையில் (ஒரிஜினலிடி) தங்கியிருக்கிறதென்றால் மதுரை மணி ஐயர் அதற்கோர் அழியாத சான்று. அவர் தாம் பாடம் கேட்ட எந்த வித்வானையும் பின்பற்றவில்லை. தமக்கெனவே ஒரு பாணியை வகுத்துக்கொண்டார். இது எல்லோராலும் செய்யக்கூடியதல்ல. எத்தனையோ இளம் வித்வான்கள் (அவருடைய சீடர்கள் உட்பட) அவர் பாணியைப் பின்பற்ற முயலுகிறார். இதுவரை எவரும் வெற்றியடைந்ததாகத் தெரியவில்லை.

கணக்கியல், பொறியியல் போல்வதன்று சங்கீதம். அது ஒரு கலைமகள் வரப்பிரசாதம். இதற்கு திருஷ்டாந்தமாய் விளங்கினார் மணி ஐயர். அவரைப் போன்றவர்கள் நூற்றாண்டுகளுக்கு ஒருதடவை அவதரிப்பவர்கள்.

'காணக்கண் கோடிவேண்டும்' என்ற பாபநாசம் சிவனின் காம்போதி ராகப் பாடலை மணி ஐயரைப் போல வேறு எவரும் பாடுவார்களோ என்பது சந்தேகம். காம்போதி அவருக்காகவோ, அவர் காம்போதிக்காகவோ படைக்கப்பட்டார்கள் என்று கூறமுடியாது.

'நாத தனு மனிஸம்', 'ஸரஸ ஸாம தான', தெமஸிராவி' முதலிய தியாகராஜ கீர்த்தனைகளை தமக்குரிய தனிப்பாணியில் இசைத்தட்டுகளில் பதிவு செய்து கர்நாடக இசை உலகும் எங்கும் பரப்பி வைத்தார் அவர். 'தன் மார்க்கசர' என்ற ரஞ்சனிப் பாட்டை இனிமேல்யாரிடம் கேட்டு ரஞ்சகம் அடையப் போகிறோம்.

கற்பனு ஸ்வரம் பாடும் போதுதான் மணி ஐயரின் மேதாவிலாசம் துலாம்பரமாக பிரகாசித்தது. ராகத்தின் ரஸபாவத்தை அறிந்து களை கனையாகப் பிழிந்தெடுத்து ஜண்டை வரிசைத்தொடர்ல் அவர் அந்த ஏழு ஸ்வரங்களையும் மணிக்கணக்காக அள்ளிக் கொட்டிக் கொண்டிருப்பார். மணிக்கணக்காக நாம் கேட்டாலும் சலிக்காது, தெவிட்டாது.

மதுரை மணி ஐயர் ஒரு மகா ரஸிகர். அதாவது இனிமை, இன்பம், எழில்,

[6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மாணவர் அமைதியின்மைக்குத் தீர்வு காணுவிடில் ராஜிநாமா’

## யூகோ. ஜனாதிபதி டிட்டோ அறிவிப்பு

பெல்கிரேட், ஜூன் 10

**யூகோஸ்லாவியாவில் தற்போது நிலவிவரும் மாணவர் அமைதியின்மையைத் தாம் தீர்க்காவிட்டால், தமது பதவியை விட்டுத் தாம் விலகப்போவதாக யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ, இங்கு அறிவித்துள்ளார்,**

மாணவர்கள் பிரச்னைகளைத் தீர்க்கவும், நாட்டின் பொருளாதாரத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்யவும், அவசர நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்ளப்போவதாகவும் டிட்டோ கூறினார்.

நேற்று அவர் டெலிவிஷனில் உரையாற்றுகையில், ‘மாணவர்களின் பிரச்னையை நான் தீர்க்கத் தவறினால், பதவியில்தொடர்ந்து இருக்கமாட்டேன்’ என்று கூறினார்.

### மாணவர்களுக்கு அனுதாபம்

மாணவர்களின் கோரிக்கைகளில் அநேகமானவற்றைத் தாம் ஒத்துக்கொள்வதாக ஜனாதிபதி டிட்டோ தெரிவித்தார். அவர்களின் அதிருப்தியையிட்டு அவர்களைத் தாம் குற்றம் சொல்வதற்கில்லை என்றார் டிட்டோ.

ஆனாலும் மாணவர்களைத் திரும்பவும் அவர்களது வகுப்புகளுக்குச் சென்று, படிப்பைத் தொடருமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

### பொருளாதாரச் சீர்திருத்தங்கள்

நாட்டின் பொருளாதாரத்துறையில் பல சீர்திருத்தங்களைச்செய்ய, யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஏற்கனவே திட்டமிட்டிருந்ததாகவும், மாணவர் அமைதியின்மை, அச்சீர்திருத்தங்களை விரைவுபடுத்த உதவியுள்ளதாகவும் மார்ஷல் டிட்டோ மேலும் குறிப்பிட்டார்.

### மாணவர் நிராகரிப்பு

இது இப்படியிருக்க, அரசாங்கம் அளித்த சமரச உடன்பாட்டுத் தீர்வொன்றை, ஒரு வாரமாக வேலை நிறுத்தம் செய்துவரும் பெல்கிரேட் பல்கலைக்கழக மாணவர்கள் நிராகரித்துள்ளனர் அத்துடன், தமது வேலைநிறுத்தத்தைத் தொடருவதெனவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

முன்னாள் யூகோஸ்லாவிய உப ஜனாதிபதி ஒருவர், மாணவர்களுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

# இந்திய ராஷ்டிரபதியின் ஹங்கேரி விஜயம் முடிவுற்றது

## ‘உலக அரசியலில் இந்தியாவின் பங்கு’

புடாபெஸ்ட், ஜூன் 10

இந்திய ராஷ்டிரபதி டாக்டர்சாகிர் ஹுசெயின் ஹங்கேரி விஜயம்நேற்றுடன் முடிவுற்றது. அவர் இன்றுகாலை தமது யூகோஸ்லாவிய விஜயத்தை மேற்கொண்டு பெல்கிரேட் புறப்பட்டார்.

டாக்டர் சாகிர் ஹுசெயின் ஹங்கேரியில் தங்கியிருக்கையில் அவர் சென்றவிடமெல்லாம் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பு தமது உள்ளத்தைத் தொடுவதாக ராஷ்டிரபதி தெரிவித்தார்.

ஹங்கேரி ஜனாதிபதியுடன் இந்திய ராஷ்டிரபதி நடத்திய பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளுக்குமிடையே உலகப் பிரச்னைகள் மீதான பொது நோக்கு இருப்பதையே எடுத்துக் காட்டின.

இரு நாடுகளுக்குமிடையே பொருளாதார தொழில் நுட்ப உறவுகளை விஸ்தரிப்பது பற்றியும் இப்பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்பட்டது.

மண்டல சார்பற்ற நாடென்ற அடிப்படையிலேயே இந்தியா உலக அரசியலில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்ற முடியுமென்று இந்திய ராஷ்டிரபதி ஹங்கேரியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

ஹங்கேரித் தலைவர்களுடன் தாம் நடத்தியுள்ள பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவையாக அமைந்ததாகவும் அவர் கூறினார்.

---

## நகரைக் கைப்பற்ற கம்யூனிஸ்ட் முயற்சி

### இந்தோனேஷியாவில் முறியடிக்கப்பட்டது

ஜாகர்த்தா, ஜூன் 10

இந்தோனேஷியாவில் மத்திய ஜாவாவில் ஒரு நகரைக் கைப்பற்ற தலைமறைவு கம்யூனிஸ்டுகள் எடுத்துக்கொண்ட முயற்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளதாக இந்தோனேஷிய இராணுவம் அறிவித்துள்ளது.

மத்திய ஜாவாவில் மீண்டும் ஊடுருவுவதற்கான கம்யூனிஸ்ட் திட்டத்தின் முதற்கட்டமே, நகரைக் கைப்பற்ற எடுக்கப்பட்ட முயற்சியென்று இந்தோனேஷிய இராணுவத்தினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## கென்னடி துக்க தினம்

வாஷிங்டன், ஜூன் 10

அமெரிக்கா முழுவதும், நேற்றைய தினம் காலஞ்சென்ற செனட்டர் ருெபேட் கென்னடியின் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கானோர் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வந்து ருெபேட் கென்னடி அடக்கஞ்செய்யப்பட்டுள்ள ஆர்லிங்டன் மயானத்தில் அவரது சமாதிக்குத் தமது அஞ்சலியைச் செலுத்தினர்

பல பகுதிகளிலும் அவருக்கு நினைவஞ்சலிப் பிரார்த்தனைகளும் நடத்தப்பட்டன.

## பஸ் விபத்தில் 5 பொலிசார் பலி

பம்பாய், ஜூன் 10

மகாராஷ்டிரத்தில, அஹமத் நகரில் நடைபெற்ற ஒரு பஸ் விபத்தில் 5 பொலிஸ்காரர் உயிரிழந்தனர். மற்றும் இருவர் காயத்துக்குள்ளாயினர் இந்த பஸ் றிசேவ் பொலிசாரைக் கொண்டு சென்றுகொண்டிருக்கையில் தடம் புரண்டது.

---

## ஜோர்டானுக்கு பெய்ஸால கடன்

### ஆயுதம் வாங்க உதவி

அம்மான், ஜூன் 10

சவுதி அரேபிய மன்னர் பெய்ஸால், ஜோர்டானுக்கு 1 கோடியே 50 லட்சம் பவுண் கடன் வழங்கியுள்ளார்.

அமெரிக்காவிடமிருந்து ஜோர்டான் ஆயுதங்கள் வாங்குவதற்கு உதவுமுகமாகவே இக்கடனை மன்னர் பெய்ஸால் ஜோர்தானுக்கு அளித்துள்ளார்.

இதுபற்றி ஜோர்டான் மன்னர் ஹுசெயின் முன்னதாக மன்னர் பெய்ஸாலுக்கு எழுதியிருந்தார்.

# தெ. கிழக்காசிய பாதுகாப்பு மாநாடு ஆரம்பமாகியது

## 5 நாடுகள் பங்குபற்றுகின்றன

கோலாலம்பூர் ஜூன் 10

பிரிட்டன் ஆஸ்திரேலியா நியூஸிலாந்து மலேஷியா சிங்கப்பூர் ஆகிய ஐந்துநாடுகளினதும் பாதுகாப்பு மந்திரிகள் இன்று மலேஷியத் தலைநகரான கோலாலம்பூரில் கூடுகின்றனர்.

இத் தென்கிழக்காசிய பாதுகாப்பு மகாநாடு மலேஷியாவின் தூண்டுகலின் பேரிலேயே நடைபெறுகிறது. இம் மாநாடு இரண்டு நாட்கள் நடைபெறும்.

தென்கிழக்காசியப் பிராந்தியத்திலிருந்து பிரிட்டன் தனது துருப்புகளை வாபஸ் பெறுவதால் அங்கு ஏற்படும் வெற்றிடத்தை வேறு யாராவது நிரப்ப வேண்டுமென்றும் மலேஷியா தாக்கப்படும் சமயத்தில் அதற்கு யாராவது உதவியளிக்க வேண்டுமெனவும் மலேஷியா இம் மாநாட்டில் வற்புறுத்துமென தெரிகிறது.

## சிங்கப்பூரில் ஆஸி, பிரதமர்

சிங்கப்பூர், ஜூன் 10

ஆஸ்திரேலியப் பிரதமர், தமது தென் கிழக்காசிய விஜயத்தின் ஒரு கட்டமாக இன்று சிங்கப்பூர் வந்து சேர்ந்தார்

அவர், சிங்கப்பூரில் 2தினங்கள் தங்கியிருப்பார். அச்சமயம், சிங்கப்பூர் பிரதமர் திரு லீ குவான்யூவுடன் அவர் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்

## ஐ. அ. கு. விமான அதிகாரிகள் மறுவிசாரணை நடக்கிறது

கெயிரோ, ஜூன் 10

ஐக்கிய அரபுக்குடியரசின் முன்னாள் விமானப்படைத் தளபதி ஒருவரினதும், அவரது சிப்பந்திகளினதும் மறுவிசாரணை இன்று கெய்ரோவில் ஆரம்பமாகிறது.

கடந்த வருடம் ஜூன் மாதம் நடைபெற்ற இஸ்ரேலுடனான போரில் ஐ. அ. கு. விமான நிலையங்கள் மீது இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதல்களைத் தடை செய்யத் தவறிய குற்றச்சாட்டு இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

முன்னர் நடந்த விசாரணையில் இருவர் விடுதலை செய்யப்பட்டனர். மற்றவர்கள் இருவருக்கு 10 வருட, 15 வருடச் சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

ஆனல் இந்தத் தீர்ப்பு போதாது என்று மாணவர்களும், தொழிலாளர்களும் நடத்திய ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து இந்த மறு விசாரணைக்கு நாஸர் உத்தரவிட்டிருந்தார்.

---

## வியட்கொங் தாக்குதல்

### 10 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்

சைகோன், ஜூன் 10

நேற்று சைகோனின் மத்திய மாவட்டங்களில் வியட்கொங்கியர் நடத்திய தாக்குதலில் 10 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். மற்றும் 33 பேர் காயமுற்றனர்.

## கைதடியில் சுகாதாரவார ஏற்பாடுகள்

கைதடி, திக.

இம்மாதம் 18 ம் திகதி முதல் 24-ம் திகதி வரையிலான சுகாதாரவாரத்தை கைதடியில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்வதென கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

விழாவை சிறப்பாக நடத்துவதற்காக திரு. அ. திரு. அ. சின்னையாவைத் தலைவராகவும், திரு. த. தியாகராசாவை காரியதரிசியாகவும், திரு. எஸ். ஆர். மயில்வாகனத்தை தனாதிகாரியாகவும் கொண்ட ஒரு சபை தெரியப்பட்டது. செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப் பட்டது.

---

## இரத்ததானம்

சுழிபுரம், திக

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த முதல் வருட ஆசிரிய பயிற்சி மாணவர்கள்சென்ற வெள்ளிக்கிழமை இரத்த தானம் செய்தனர். இருபதுக்கு மேற்பட்டவர்கள் இரத்ததானம் செய்தனர்.

# மார்டின் லூதர் கிங் கொலையில் தேடப்பட்ட ஜேம்ஸ் ஏன்றே

## பொய்ப்பெயரில் நடமாடுகையில் லண்டனில் கைது

லண்டன், ஜூன்.10

அமெரிக்க நீக்ரோத் தலைவர் டாக்டர் மாட்டின் லூதர் கிங்கைக் கொன்றவனென அமெரிக்கரால் கருதப்படும் ஜேம்ஸ் ஏன். றே என்பவன் லண்டன் நீதிமன்றமொன்றில் இன்று ஆஜராகவுள்ளான்.

ஜேம்ஸ் ஏன்.றே. நேற்று முன்தினம் லண்டன் விமான நிலையத்தில் வைத்து, இங்கிலாந்தின் பிரபல துப்பறியும் நிறுவனமானஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த துப்பறியும் நிபுணர்களால் கைது செய்யப்பட்டான். இவன் பல நாடுகளினூடாகச் சென்று இவ்வியக்க துப்பறியும் நிறுவனமான எவ். பீ. ஐக்கு டிமிக்கி கொடுத்துக் கொண்டு வந்தவராவர்.

### துப்பாக்கி

அவர் லண்டன் விமான நிலையத்தில் வைத்துக்கைது செய்யப்பட்டபோது றேமண்ட் ஜோர்ஜ் ஸ்ஜலேட் என்ற பொய்ப்பெயரொன்றின் கீழ் பிரஸ்ஸல்சுக்குச் செல்ல விருந்தார். அவரிடம் லைசென்ஸ் இல்லாத துப்பாக்கியும் காணப்பட்டது.

பொய்ப் பெயரின் கீழ் சென்றதாகவும் லைசென்ஸ் இல்லாத துப்பாக்கி வைத்திருந்ததாகவும் றே மீது இரு குற்றச்சாட்டுகளை லண்டன் பொலிசார் சுமத்தியுள்ளனர்.

### லண்டனில் அமெரிக்க அதிகாரி

இதற்கிடையில் ஏன்றேயை அமெரிக்காவுக்கு அனுப்புவதை விரைவுபடுத்தும் நோக்கமாக அமெரிக்க உதவி அட்டோர்னி ஜெனரலான திரு பிரேட் வில்சன் இன்று லண்டன்வந்து சேர்ந்தார்-

### பாராட்டு

ஜேம்ஸ் ஏன்றேயைப் பிடிப்பதற்கு உதவி செய்ததற்காக திரு வில்சன். றோயல் கனடியன் மவுண்டட் பொலிஸ் படைக்கும் ஸ்கொட்லாந்து யார்ட்டுக்கும் தமது பாராட்டைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சமர்கள் கோயிலுக்குள் செல்லும் உரிமையை சமூக குறைபாடுகள் சட்டம் அளிக்கவில்லை

## பழக்கவழக்கத்துக்கு சட்டத்தில் அதிகாரமுண்டு

ஆலயப் பிரவேசம் என்பது சம்பந்தமாக 1957-ம் ஆண்டின் 'சமூக குறைபாடுகள் சட்டம்' எவ்வித சக்தி உடையது?

சிறுபான்மைத் தமிழர் என்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றும் கூறப்படும் பஞ்சமர்களை கோயில் முதலாளிமாரோ தர்மகர்த்தாவோ அல்லது அவர்களின் பிரதிநிதியோ இந்து ஆலயங்களுக்குள் செல்லவிடாமல் தடுக்கமுடியுமா என்பது கேள்வி.

தர்மகர்த்தா சொத்துக்கள் பற்றியும் தர்மகர்த்தாவின் உரிமைகள் பற்றியும் இலங்கை சட்டங்களில் கூறப்பட்டுள்ளது.

இந்து ஆலயங்கள் பொதுவாக தர்மசொத்துக்களே. சுப்றீம் கோட் தீர்ப்பின்படி தர்மசொத்துக்கள் என்று குறிக்கப்படும் இந்து ஆலயங்களை சமூக குறைபாடுகள் சட்டம் பாதிக்க முடியாது. தர்மகர்த்தா சட்டத்தையும் அது பாதிக்காது.

தர்மகர்த்தா சட்டத்தின் 106-ம் பிரிவில் கோயில் நிர்வாகம்பற்றி இருவிஷயம் கூறப்படுகிறது. [1] சம்பந்தப்பட்ட சமுதாயத்தின் சமய சட்டமும் பழக்க வழக்கமும் [2] குறிப்பிட்ட கோவில் சம்பந்தமான உள்ளூர் பழக்க வழக்கங்களும்.

இந்த 106-ம் பிரிவு சமூக குறைபாடுகள் சட்டத்தால் மாற்றப்படவில்லை.

இந்து ஆலயங்களைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட சமுதாயத்தின் சமயசட்டமும் பழக்கவழக்கமும் என்பது இந்துக்களின் சமயசட்டத்தையும் பழக்க வழக்கத்தையும் குறிக்கும். யாழ்ப்பாண குடாநாட்டிலும் இலங்கையிலும் வாழும் இந்துக்கள் சைவ மார்க்கத்தை சேர்ந்தவர்கள். எனவே இலங்கை இந்து கோவில்களின் நிர்வாகமும் அங்கு நடக்கும் வழிபாடும், விழாக்களும், பூசைகளும் சைவ ஆகமங்களின்படி நடக்கின்றன. சைவ ஆகமங்கள் பற்றி கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் இந்து ஆலயங்களில் முக்கியமாக யாழ்ப்பாண ஆலயங்களில், உருவாக்கப்பட்டு மதிக்கப்பட்டு, பின்பற்றப்பட்டுவரும் சைவ ஆகமங்கள் இந்து ஆலயங்களுக்குள் பஞ்சமர்கள் பிரவேசிப்பதற்கு இடம் கொடுக்க மாட்டா. சமய சட்டமும் சமுதாய பழக்க வழக்கங்களும் அதற்கு இடம்தரமாட்டா.

சமூகக் குறைபாடுகள் சட்டம் வருவதற்கு முன்பே சூத்திரருக்கு சொந்தமான கோயில்களில் பஞ்சமர் அனுமதிக்கப்படவில்லையென்பது எனக்கு தெரியும். பஞ்சமருக்கு சொந்தமான பெரும்பாலான கோயில்களுக்கே அவர்கள் போவதில்லை. ஆகவே பஞ்சமர்களை கோயிலுக்குள் அனுமதிக்காததே சூத்திரர்களுக்கு சொந்தமான இந்து கோயில்களில் நிலவிவந்த வழக்கம்.

தர்மகர்த்தா சட்டம் வருவதற்கு முன்பே இந்து ஆலயங்களுக்குள்ளும் பஞ்சமர்களை அனுமதிக்காத வழக்கம் சட்டத்தின் உருவைப் பெற்றுவிட்டது.

சமுதாயத்தின் குறிப்பிட்ட சில வகுப்பினர் கோயிலுக்குள் செல்வது பற்றியும் சைவ ஆகமங்கள் பற்றியும் நிலவிய வழக்கங்களை இணுவில் கந்தசுவாமி கோயில் வழக்கில் சுப்பிரீம் கோர்ட் ஏற்றுக்கொண்டிருக்கிறது. பிராமணரல்லாதவர் கோயில் மூலஸ்தானத்துக்குள் போகப்படாதென்று இதில் தீர்மானிக்கப்பட்டது. நிலவும் பழக்கவழக்கம் சட்டத்தில் அதிகாரத்தைப் பெறுமென்பது நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் வழக்கில் சுப்றீம்கோட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏற்னவே நிலவிய ஒரு பழக்க வழக்கத்தை சமூக குறைபாடுகள் சட்டம் மாற்றமுடியாது. ஒரு சட்டத்தை அது சட்டமாவதற்கு முன்பிருந்தே அமுல் செய்வது இயற்கை நீதிக்கு விரோதமானது.

இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் கோயில்களுக்குள் பிரவேசிக்கும் உரிமை இல்லாத பஞ்சமர்களுக்கு இனிமேலும் உரிமையில்லை.

இலங்கை இந்து ஆலயங்களுக்கும் முக்கியமாக யாழ்ப்பாண கோயில்களுக்குள், பிரவேசிக்கும் உரிமை பஞ்சமர் அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற சிறுபான்மை தமிழருக்கு இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

- சி. பொன்னம்பலம் -

[வழக்கறிஞர்]

பொலிஸ் அதிகாரி ஒருவர் ஒருபஞ்சமரை வலோற்காரமாக ஓர் இந்து கோயிலுக்குள் கொண்டு சென்றால் அவர் மீது அத்துமீறி பிரவேசித்ததாக வழக்கு தொடரலாம்.

# "மாவட்டசபைகளால் தமிழர் உரிமை பறிபோகும்"

## திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

'இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் மாவட்டசபை வெள்ளை அறிக்கைக்கும் முதலில் தயாரிக்கப்பட்ட மாவட்டசபை நகல் மசோதாவுக்குமிடையில் நிறையவேறுபாடுண்டு. முதலில் அமைச்சர் திருச்செல்வம் தயாரித்தது இந்திய-மகாராஷ்டிர ஜில்லா பரிஷாத்தினுடையது. அதைத் திருத்தி எடுத்ததுதான் மந்திரிசபையில் சமர்ப்பிக்கப்பட்ட நகல் மசோதா. ஆனால் இன்று இது மூன்றும் உருவம்பெற்று வந்துள்ளது'.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் பொதுச்சபைக் கூட்டத்தில் பேசுகையில் திரு ஜி ஜி பொன்னம்பலம் தெரிவித்தார்.

மாவட்டசபை வெள்ளை அறிக்கையும் நகல் மசோதாவும்பற்றி திரு. பொன்னம்பலம் மேலும் பேசியதாவது:—

மாவட்டசபை வந்தால் தமிழ் மாவட்டங்களில் தமிழ்தான் ஆட்சிமொழி எனப் பிரசாரம் செய்யப்பட்டது பொய்யாகிவிட்டது. அந்த மாவட்டசபையானாலும் அது பதிவேடுகளையும், அறிக்கைகளையும் கடிதத் தொடர்புகளையும் சிங்களத்தில் கட்டாயம் வைத்திருக்கவே வேண்டும் என வெள்ளையறிக்கையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இப்படியானால் யாழ்ப்பாணம், மன்னார், திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் அமைக்கப்படும் மாவட்டசபைகளும் தமக்குள் செய்யும் தொடர்புகளையும் சிங்களத்தில் செய்யவேண்டியநிலை ஏற்படும். இதனால் தமிழ்மொழியும், எமது உரிமையும் அழிக்கப்படுமே யன்றி பாதுகாக்கப்படாது. இது நகல் மசோதாவின் 23ம்பகுதியில் விரிவாகவிளக்கப்பட்டுள்ளது

### பரவலாக்குவது என்று இல்லை

மாவட்டசபைகள் என்றால் அதிகாரத்தைப் பரவலாக்குவது என்பதற்கு நகல் மசோதாவின் எந்தப்பகுதியிலும் அவ்வாறு விளக்கம் கொடுக்கப்படவில்லை இதனாலேயே சிங்களப்பகுதிகளிலுள்ள ஸ்தலஸ்தாபனசபைகள்சகலதும் இதனை எதிர்க்கின்றன. நகல்மசோதாவின் 5-ம் பகுதியின் 30-ம் பிரிவில் மாவட்டசபையின் பதவியையும், உத்தியோகத்தையும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்துடன்செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுநடைமுறைக்கு வருமானால் தற்போது நடைமுறையிலிருக்கும் கச்சேரியில் விடும்பிழைகளிலும் பார்க்கக் கூடுதலான பிழைகளை மாவட்ட சபைகள் விடும் என்பதில் ஐயமில்லை.

### நியமனம் கிடைக்குமா?

ஒவ்வொரு மாவட்டசபையிலும் 3 நியமன அங்கத்தவர்கள் தெரியப்படுவார்கள். இதில் தமிழ் மாவட்டம் இரண்டிலும் வாக்குரிமை இல்லாதிருக்கும் இந்திய வம்சாவழியினரில் ஒருவருக்காவது நியமனம் கிடைக்குமோ என்பது சந்தேகம். இது மட்டுமன்றி இலங்கையின் தமிழ்ப்பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளில் சுமார் 18 லட்சம் தமிழ் மக்களில் ஒருவருக்காவது தென்னிலங்கையில் அமைக்கப்படும் 20 மாவட்டங்களிலும் நியமன அங்கத்தவர்கள் பதவி கூட கிடையாது.

எந்த ஓர் உரிமையும் இந்த மாவட்டசபையில் இல்லாததாலேயே அன்று முதல் இன்றுவரை இதை நான் எதிர்த்து வருகிறேன்.

திருவாளர்கள் ஆனந்தசங்கரி, மோதிலால் நேரு எஸ் ஆர், கனகநாயகம் என் நடராஜா ஸ்ரீதரன் ஆகியோரும் பேசினார்கள். [கா. நி]

### 'வேறுபாடு கடந்த வழிவகுத்தவர்'

சுழிபுரம், திங்கள்

'வள்ளுவர் ஜாதி, இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்த கருத்துக்களைத் தமது குறள் மூலம் எமக்குத் தந்தவர். ஈராயிரம் ஆண்டுகளாக என்றும் இளமை குன்றாதவாறு விளங்கும் திருக்குறள் மணிகளை எமக்கு ஓர் வழிகாட்டியாக அவர் வகுத்துள்ளார்.

இவ்வாறு வழக்கம்பரை அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் உரையாற்றிய திரு. இ. அப்பாத்துரை கூறினார்.

திரு. க. வாமதேவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. அப்பாத்துரை மேலும் பேசுகையில் வள்ளுவன் எமது வாழ்வில் எல்லா அம்சங்களையும் இணைத்து ஓர் இனிய வாழ்வு [illegible] நன்றி கூறினார்.

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்

# முகூர்த்த நாள்

விமரிசனம்

'முகூர்த்தநாள்' பார்த்தாகிவிட்டதா என்று கேட்டுக்கொண்டே வந்தாள் என் சகதர்மிணி.

நம்ம மூத்த பிள்ளைக்கு இப்போதானே ஆறுவயது யாருக்கு எதுக்காக முகூர்த்தநாள் பார்க்கச் சொல்கிறாள், 'என்ன சொல்கிறாய்?' என்று அவளையே கேட்டேன்.

'எனக்குத் தெரியாமல் இரகசியமாகப் படம்பார்த்துவிடுவீர்களல்லவா? அதுதான் 'முகூர்த்தநாள்' படமும் பார்த்துவிட்டீர்களா என்று கேட்டேன்' என்றாள் குத்தலாக.

முகூர்த்தநாள் வந்து இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னுமா அதைப் பார்க்காமலிருந்திருப்பேன். இதை அவளிடம் சொல்ல முடியுமா. உன்னையும் 'கூட்டிக்கொண்டு போகிறேன்' என்று சமாதானம் சொல்லிவைத்தேன். இல்லையென்றால் விடுவாளா. கடைசி படத்தின் கதையைக் கேட்டு உயிரைவாங்கமாட்டாளா.

சகோதர பாசத்துக்கென படங்கள் பல வந்திருக்கின்றன. நட்புறவுக்கும் படங்கள் பல வந்துள்ளன. சகோதரபாசத்தையும், நட்புறவையும் இணைத்துள்ளதுதான் 'முகூர்த்தநாள்' படத்தின் கரு.

ஜெய்சங்கருக்கு ஒரு தங்கை. தங்கை மீது அண்ணன் உயிரையே வைத்திருக்கிறான். இல்லாவிட்டால் தங்கை தற்கொலை செய்வதற்குக் காரணமாக இருந்தவனைப் பழிவாங்குவதற்காக தன் உறக்கத்தையும் தன் காதலையும் மறந்து திரிவானா? ஜெய்சங்கருக்கு முத்துராமன் நண்பன். அப்படி இப்படி நட்பல்ல. எவன் எதைக் கேட்டாலும் மற்றவன் இல்லையெனமாட்டான். தம்பியைக் கொல்வதற்குத்தான் நண்பன் துப்பாக்கியைக் கேட்கிறான் எனத் தெரிந்தும் முத்துராமன் தனது துப்பாக்கியைக் கொடுப்பானா?

சகோதரபாசமும் நட்புறவும் தமிழ்ப் படங்களில் அடிக்கடி பார்த்துப் பழகிப்போன 'சரக்கு' என்றாலும் இப்படத்தில் எதிர்பாராத சில திருப்பங்களும் படப்பிடிப்பு உத்திகளும் கையாளப்பட்டிருப்பதால் சில கட்டங்கள் விறுவிறுப்பாகவும் இருக்கின்றன.

தனக்கெனத் தனிப்பாணியொன்றை வகுத்துக்கொண்ட ஜெய்சங்கர் சோகத்தையும் சிறப்பாகக் காட்ட முடியுமென்பதை உணர்த்துகிறார். முத்துராமன், மாதவி, தங்கையாக வரும் சத்தியாராணி ஆகியோரும் தங்கள் கடமையைச் சிறப்பாகச்செய்து முடிக்கின்றனர். ஜெய்சங்கரின் காதலியாக, தோட்டக்காரி [தேயிலைத்தோட்டத்தில் கொழுந்தெடுக்கும் பெண்] யாக வரும் கே. ஆர். விஜயா அநாயாசமாக நடித்துத்தள்ளிவிடுகிறார்.' 'கையைத்தொட்டுக்கொண்டே இரையா' என்று விஜயா சொல்லும் கட்டம் ஒன்றே போதுமே.

சிரிப்புக்கு நாகேஷ் இருக்கிறாரென்றால் போதுமே.

நட்புறவுக்கும் சகோதர பாசத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட அட்டகாசம் அதிகமில்லாத நல்லபடம் முகூர்த்தநாள். குடும்பத்துடன் ஒரு தடவை பாருங்களேன். என் சகதர்மிணி 'ரெடி' யாகிவிட்டாளே. வரட்டுமா யாழ்ப்பாணம் ராஜா தியேட்டருக்குத்தான்.

—'திரைவண்டு'

### முத்துமாரியம்மன் ஆலயவருஷாபிஷேகம்

கொம்பனித்தெரு, திங்.

கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் பதின்நான்காவது ஆண்டு வருஷாபிஷேக நவோத்தர சகஸ்ர சங்காபிஷேக வைபவம் சென்ற 6-ம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

இந்த அபிஷேக வைபவத்திற்கு கொழும்பின் பல பகுதிகளிலுமிருந்து நூற்றுக்கணக்கான அடியார்கள் பங்குபற்றினார்கள்.

### தகவல் நிலயத்தில் அனுதாபம் தெரிவித்தனர்

கொம்பனித்தெரு, திங்.

காலம் சென்ற ரொபேட் கென்னடிக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக அமெரிக்கத் தகவல் நிலயத்தில் அனுதாபம் தெரிவிப்போர்கை எழுத்திடும் புத்தகத்தில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் அமெரிக்கத் தகவல் நிலையத்திற்குச் சென்று தங்கள் அனுதாபத்தை தெரிவித்தனர்.

# இளம் மனமாற்றத்தால் இரு குடியேற்ற திட்டங்கள்

## யாழ். உதவி அரசாங்க அதிபர் கூறுகிறார்

சுழிபுரம், திங்கள்

'இளம் உள்ளங்களின் மனமாற்றத்தால் இரு குடியேற்றத் திட்டங்கள் ஏற்பட்டுள்ளன. ஆண்களுக்கான விசுவமடுக் குடியேற்றத்திட்டமும் பெண்களின் மிருசுவில்குடியேற்றத்திட்டமும் நாட்டின் விவசாய பொருளாதார திட்டங்களை மேம்படுத்த பெரும் உதவி செய்து வருகின்றன'.

இவ்வாறு விக்டோரியாக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகேசம்பிள்ளை கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. வி. [illegible]தம்பு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. வி. முருகேசம் பிள்ளைமேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'அன்று நமது சைவப்பெரியார்கள் சைவத்தையும் தமிழையும் வளர்த்துக் காப்பாற்ற எப்பரிய சேவை செய்தார்கள் இதனால்தான் சைவமும் தமிழும் இன்று வளர்ந்துள்ளது. அவர்கள் அவ்விதம் செய்திராவிட்டால் இன்று இவ் பெரிய கல்லூரியை நாம் கண்டிருக்க முடியாது'

மாணவமாணவிகள் எதிர்காலத்துக்கான நல்ல திட்டத்தை உருவாக்கி செயல்படவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

திருமதி முருகேசம்பிள்ளை வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் அம்பலவாணக் கந்தசுவாமி கோவில்

## மஞ்சத் திருவிழா

12-6-68 (12-ந் திருவிழா வன்று) மாலை 6 மணியள வில் இலங்கையிலே காண முடியாத கலைக்கோவில் என அழைக்கப்படும் மஞ்சம் நீண்டகால இடை வெளிக்குப்பின் தற்போது இழுக்கப்படுகின்றது. அடி யார்கள் அனைவரும் திரண்டுவருக.

827 சு. இரமலிங்கம்

## ஏல விற்பனவு

''வசந்தம்'' மானிப்பாய் திரு. வி. கே. இராசலிங்கம் அவர்களிடம் 1-4-67 திகதிக்கு முன்வைத்த அடைவு நகைகளில் மீட்கப் படாதவை 1-7-68 திங்கட் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அதே இடத் தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏல விற்பனவாளர்.
வண்ணார்பண்ணை. 828


## வின்சர்

ஜெமினி கணேசன்
சாவித்திரி முத்துராமன்
கே. ஆர். விஜயா நாகேஷ்
நடித்த

# சீதா

ஜெமினி கணேசனின்
100வது படம்.
சாவித்திரியின்
150வது படம்.
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
A. P. நாகராஜன்


வலிகாமம் கிழக்கு

# தமிழ் ஆசிரியர் சங்க பேச்சுப் போட்டி முடிவுகள்

உரும்பராய், திங்கள் வலி-கிழக்குத் தமிழ் ஆசி ரியர் சங்கச் சார்பில் அதன் தலைவர் திரு. க. இ. குமா ரசாமி தலைமையில் நடை பெற்ற பேச்சுப் போட்டி யில் தேர்வுபெற்ற மாண வர்களுக்குரிய சான்றுப்பத் திரங்களையும் பரிசில்களையும் வட-இலங்கைத் தமிழ் ஆசி ரியர் சங்கத் தலைவர் பண்டி தர் ஸ்ரீ ச. பொன்னுத்துரை வழங்கினர். சங்கச் செய லாளர் திரு. ஆ. பஞ்சாட் சரம் சகலருக்கும் நன்றி தெரிவித்தார். போட்டியில் தேர்வு பெற்றோர் விபரம் வருமாறு:—

கீழ்ப்பிரிவு ஆண்கள்;-

பொ. வரதகுலசிங்கம் றோ. க. பாடசாலை கோப் பாய் தெற்கு.

ப. தங்கராசா நடராசரா மலிங்க வித்தியாசாலை ஆவ ரங்கால்.

பொ. கெங்காதரன் இந் துத் தமிழ் கலவன் பாட சாலை நீர்வேலி.

கீழ்ப்பிரிவு பெண்கள்:—

க. சாந்தினி சைவ தமிழ் வித்தியாசாலை உரும்பராய்.

க. கிருபாதேவி கந்தவேள் வித்தியாசாலை கோப்பாய்.

க. வசந்தாதேவி சரவண பவானந்த வித்தியாசாலை கோப்பாய்.

மத்திய பிரிவு ஆண்கள்:—

த. குணராசா நடராசரா மலிங்க வித்தியாசாலை ஆவ ரங்கால்.

மா. கருணாநிதி சைவத் தமிழ் வித்தியாசாலை உரும் பராய்.

இ. சிங்கராசா மெ. மி. பாடசாலை ஆவரங்கால்.

மத்திய பிரிவு பெண்கள்:—

சி. நகுலாதேவி சைவத் தமிழ் வித்தியாசாலை உரும் பராய்.

க. புஷ்பராணி சரவண பவானந்த வித்தியாசாலை கோப்பாய்.

செ. இராசேஸ்வரி மெ. மி. பாடசாலை ஆவரங்கால்.

மேற் பிரிவு ஆண்கள்:—

இ. குணலிங்கம் சைவத் தமிழ் வித்தியாசாலை உரும் பராய்,

மா. சிவஞானம் மெ. மி. பாடசாலை ஆவரங்கால்.

வே. இரத்தினசிங்கம் மெ. மி. பாடசாலை ஆவரங்கால்.

மேற்பிரிவு பெண்கள்:—

ந. ஞானேஸ்வரி சரவண பவானந்த வித்தியாசாலை கோப்பாய்.

தி. சண்முகசோதி, மகா ராணி மெ. மி. பாடசாலை ஆவரங்கால்.

பொ. சுகிர்தமலர் சைவ த்தமிழ் வித்தியாசாலை உரு ம்பராய்.


2வது வாரம்!

## ராஜா

(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா
நடிக்கும்

## முகூர்த்த நாள்



## ராணி

(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ
நடித்த

## நான் யார் தெரியுமா?


## தீவுப்பகுதி விளையாட்டுச்சங்கம்

ஊர்காவற்றுறை, திங். ஊர்காவற்றுறையில் புதி தாக தீவுப்பகுதி விளையாட் டுச் சங்கம் ஒன்று அங்கு ரார்ப்பணம் செய்து வைக் கப்பட்டுள்ளது.

இச்சங்க நிர்வாக உறுப் பினர்களாகப் பின் வரு வோர் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

தலைவர்: சொ. விநாயக லிங்கம் [தீவுப்பகுதி காரியா திகாரி], உப தலைவர்கள்: வண. பிதா. எவ். ஜே. ஸ்ர ஸ்லோஸ், டாக்டர் கே. கி. துரைசிங்கம், செயலாளர்: தீவுப்பகுதி விளையாட்டதி காரி, திரு. பே. பொன் னுச்சாமி, பொருளாளர்: திரு. இ. மாணிக்கம் 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட் டது.

## புங்குடுதீவு மக்கள் கஷ்டம்

கொம்பனித்தெரு, திங். புங்குடுதீவு அரசினர் ஆஸ் பத்திரியில் பலமாத கால மாக வைத்திய அதிகாரியி லாததினால் புங்குடுதீவு மக் கள் மிகவும் கஷ்டமடை ந்து வருகிறார்கள். இதனால் சிகிச்சை பெறவேண்டிய வர்கள் வெளியிடங்களுக்கு வீண் செலவு செய்து செல்ல வேண்டியிருப்பதாகத் தெரிய வருகிறது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி | பிளாசா | மைலன் |
| வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | விஜயா [மட்டக்களப்பு] | ராஜ் [நீர்கொழும்பு] |
| ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [அட்டன்] | அயன் [மன்னார்] |

★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், அசோகன், ராஜ்குமார்,
புஷ்பலதா, வி. கே. ராமசாமி,
நாகையா
நடித்த
ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

# 'ராமு'

அன்னை, குழந்தையும் தெய்வமும், மேஜர் சந்திரகாந்த் ஆகியவற்றை அளித்த ஏ.வி.எம். புரொடக்ஷன்ஸ் அளிக்கும் ஜனாதிபதி பரிசு பெற்ற மற்றோர் உன்னத திரைவிருந்து. சென் னையில் நூறு நாட்களுக்குமேல் ஓடிய படம்.

இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: திருலோகசந்தர்

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M.
VinceEdwards&CarolOhmart
in
CITY OF SIN

MANOHARA
JAFFNA
Daily 4-00, 7-00, 9-00
Horst Bocholz
in
FANNY


# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

லைசென்ஸ்:

72666 இலக்கமும், பொன் னையா சிவகுரு, கச்சாய் றோட், சாவகச்சேரி விலாச மும் கொண்ட சாரதி லைசென்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் படி விலாசத்திற்கு அனுப்பி னால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1556

## வாடகைக்கு

வீடு:

எல்லா நவீன வசதிகளும் உடைய வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: ரீ. தி நாமம், 3ம் கட்டைபடி, கொக்குவில். 1555

ஆயுர்வேத

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ் வட இலங்கை சுதேசவைத் தியசபையினரால் யாழ்ப் பாணம் இலங்கா ஆயுர் வேத சித்த வைத்தியக் கல்லூரியில் சென்ற ஏப்ரல் மாதம் நடந்த வருடாந்தப் பரீட்சையில் சித்திபெற் றோர் விபரம் வருமாறு:

### மூன்றாம் வருடம்

2-ம் பிரிவு— மி. இதீ கமலாதேவி, யோசேப் [செல்வி], ஆர். சுசிலா, கே. பாலசுப்பிரமணியம், கே. என். மகேஸ்வரன், எஸ். நகுலா கே. செல்வ பாரதி, கே. வி. கே. ஜெயசந்திரா.

### இரண்டாம் வருடம்

1-ம் பிரிவு— எஸ். பர மேஸ்வரி, எம். விக்கினேஸ் வரமூர்த்தி, ஜோ. குவீன் மேரி, எஸ். பரசிவம் பிள்ளை, ரி.டி. மதுரநாயகம் என். சக்திவேல். மி. தியா கேஸ்வரன், கே. கந்த சாமி.

ரி. சரோஜினிதேவி, மி. சந் தானகோபாலன்.

### 1-ம் வருடம்

1-ம் பிரிவு: மி. நாகேஸ் வரி, எஸ். மேரிசோபியா.

2-ம் பிரிவு: ஞ. மேரி ராணி, என். ஜெயமலர், மி. மாவரதிணம், ரி. பத்மா வதி, என். சர்வேஸ்வரன், ஜே. பெஞ்ஞ்டோபிள்ளை, ஏ. மேரி கிறேஸ், எஸ். கௌரி, எஸ். பரராசசிங் கம், குருஸ், ரி. சிவானந் தன், எஸ். பசில்ஸ், ரி. ராஜகம்பீரம்.

இறுதி வருட மாணவர் களின் பரீட்சை முடிவுகள் பின்பு அறிவிக்கப்படும்.

## தேவை

கணக்கெழுதும் திறமை யும், கடை அனுபவமுமுள்ள ஒருவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வர வும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ் பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1554

''நல்ல உடற்கட்டுள்ள சமாராகப் படிச்த வாலிப ர்கள் சாயத் தொழிற்சாலை க்கு உடனே தேவை. நற் சாட்சிப் பத்திரங்களுடன் நேரிலே சமுகந்தரவும். உரிமையாளர், லோட்டஸ் சாயச்சாலை, புதுச்செம்மணி வீதி, கல்வியங்காடு, யாழ்ப் பாணம். 1557

## விற்பனைக்கு

காணி:

நாவற்குளிச் சந்திக்கரு கிலும் வட்டுக்கோட்டை மேற்கு அரசடிச்சந்திக்கரு கிலும் முறையே 6பரப்பும், 8 பரப்பும் விஸ்திரணங்க ளுள்ள காணிகள் விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு: யோகா கபே, வட்டுக் கோட்டை. 1552

விஸ்ற்றர் வாட்டர் கூல் 38 HP 4 சிலிண்டர் டீசல் இயந்திரம் Acpc 342 KW ஜெனரேட்டருடன் விற்ப னைக்குண்டு. A.S. ராசநாய கம், செவ்வந்தி மோட்டார் வொர்க்ஸ். 6 ஸ்டான்லிவீதி, யாழ்ப்பாணம். 1553

காணி:

12 1/2 பரப்புபனங்காணி விற்பனவுக்கு சோண்டாவில் கிழக்கில் இருக்கின்றது. விப ரங்கட்கு தொடர்புகொள்ள வும். விலாசம்: திருமதி தியா கராசா அன்னம்மா, கோண் டாவில் கிழக்கு, கோண்டா வில். 1335

தக்காளிச் செய்கை கோடைத்தக்காளி வன்னிக் குடியேற்றத் தண்ணி வசதி உள்ள இடங்களில் நட்டால் நன்கு பலிதமாகும். என்னி டம் தக்காளி நாற்று இருக் கிறது. குறைந்த விலைக்கும் உபகாரமாகவும் கிடைக் கும். அரசாங்கம் இந்த பழக்கமே எடுக்கும். தி சபா பதிதினம், இருபாலை றோட், கோண்டாவில் கிழக்கு. 1358

## புதிய ஜே. பி.

அநுராதபுரம், திங்கள் அநுராதபுர மாவட்டத் துக்கு புதிய சமாதான நீதவானாக திரு. ஆர். வி. கந்தசாமி நியமிக்கப்பட்டு ள்ளார். இவர் அநுராத புரம் பட்டின சபையின் முன்னாள் தலைவராவார்.


முதலாவது

## ஆண்டு நிறைவு விழா

கடந்த ஆண்டு எமக்கு அளித்த நல்லாதரவை
தொடர்ந்தும் தருமாறு
அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

அழகிய
ஆடைகளுக்கும்
வண்ண வண்ண
புடவை தினுசுகளுக்கும்
உயர்தர
தையல் வேலைகளுக்கும்
சிறந்ததோர் ஸ்தாபனம்

# சிவரூம்ஸ்

[நூதனசாலைக்கு முன்பாக]
12, பிரதான வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றத்தை ஒப்புக்கொண்டார்

குரும்பசிட்டி, திங்கள்

அச்சுவேலி மாலிசக்குற்றவாளிகள் சீர்திருத்தப்பாடசாலையிலிருந்து அறையை உடைத்து சுவர் மணிக்கூடு ஒன்றைத் திருடிச் சென்றதாகக் கூறப்படும் வாலிபன் ஒருவன் ஒரு மாத காலத்தின் பின் அகப்பட்டான்.

கந்தளாயைச் சேர்ந்த ஏ. கிருஷ்ணன் என்பவர் கடந்த மாதம் 8-ந் திகதி இரவு இப் பாடசாலையில் இருந்து 375 ரூபாய் பெறுமதியான மணிக்கூட்டைக் களவாடிக்கொண்டு பாடசாலையிலிருந்து ஓடிய இவரை கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்து காங்கேசன்துறை பொலிசார் கைது செய்தனர்.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் வாலிபரை ஆஜர்செய்தபோது தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார். தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்த நீதவான் இம் மாதம் 15-ம் திகதி வரை இவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

---

## "மீனாக்கவலையை அடையச்செய்கிறது"

யாழ்ப்பாணம், செவ்.

"இசை மேதை மதுரை மணிஐயர் பிரிவு மீனாக்கவலையை அடையச் செய்கின்றது. இசையை பாமரரும், பாலகரோரும் அனுபவித்துப் பேரின்பம் அடைய இவர் ஆற்றிய சேவை அளப்பரியது". இவ்வாறு அண்மையில் இசைத் தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழிசைக் கல்லூரி ஆசிரியர் திரு. ஏ. நமசிவாயம் கூறினார். மற்றும் சில மாணவர்களும், ஆசிரியர்களும் உரை நிகழ்த்தினர். (ந. நி)

---

## புதிய தபால் நிலையம்

உடுப்பிட்டி, திங்.

நாகர் கோவிலில் நாளை புதிய உபதபாற் கந்தோரொன்று திறந்து வைக்கப்படவிருக்கிறது. இத்திறப்பு விழாவிற்குப் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் தலைமை வகித்து உபதபால் கந்தோரை திறந்து வைப்பார். வடபகுதி தபால் அத்தியட்சகர் திரு. மா. தர்மலிங்கம், கரவெட்டி தபாற் கந்தோர் அதிபர் திரு. சந்திரப்பிள்ளை ஆகியோர் இத்திறப்பு விழாவில் கலந்து கொள்வர்.

---

## ஹோட்டல்களின் பின்பக்கத்தில்?

கொம்பனித்தெரு, திங்.

கொழும்பு நகரிலுள்ள ஹோட்டல்கள் சுகாதார மற்ற நிலையிலிருப்பதாக சுகாதாரப் பகுதியினர் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த ஹோட்டல்களில் பின் புறமாகவுள்ள சமையலறைகள் மிகவும் அசுத்தமாகவும் சுகாதாரமற்ற நிலையிலுமிருப்பதால் இங்கு சமையல் செய்யும் சமையற்காரர்கள் அதிகமாக நோய்வாய்ப் படுவதாகவும் தெரியவந்துள்ளது. முன்புறம் அலங்காரமாக இருக்கும் ஹோட்டல்களின் பின்புறம் அலங்காரமாக இருப்பதில்லையென சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

## 'திருக்குறள் வகுப்புகள் கிராமந்தோறும் நடைபெறவேண்டும்'

### கோப்பாய் எம்.பி. கூறுகிறார்

கோப்பாய், திங்கள்

"தமிழ் சமுதாயத்தின் சமயம், நாகரிகம், பண்பாடு, அடிப்படை, இலட்சியம் முதலான உயர்ந்த நோக்கங்களை ஒரு காலத்திலே சிறக்கச்செய்தவர் வள்ளுவப் பெருந்தகையாவர்"

மேற்கண்டவாறு இருபாலை மத் யசனசமூக நிலையத்தாரால் நடாத்தப்பட்ட திருவள்ளுவர் தினவிழாவில் பேசுகையில் கோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

திரு. நா. அருளம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில், "வள்ளுவருக்கு விழா எடுப்பதுடன் நின்றுவிடாது அவரது உயர்ந்த கருத்துக்களை நாம் பின்பற்றி வாழவேண்டும். அப்பொழுதே நமது சமுதாயம் ஒரு நிரந்தரமான அடிப்படை இலட்சியம் கொண்ட சன்மார்க்கம் நிறைந்த சமுதாயமாக நிலைக்கமுடியும். அது மாத்திரமன்றி திருக்குறள் வகுப்புக்களை கிராமந்தோறும் நடாத்தி வள்ளுவரின் கருத்துக்களை மக்கள் மத்தியிலே விளங்கச் செய்தல் அவசியம்" எனவும் கூறினார்.

திரு. வி. எஸ். கணேசசுந்தரத்தின் வில்லிசையும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இவ் விழாவை யொட்டி நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி கட்டுரைப்போட்டி முதலியவற்றில் வெற்றி பெற்றோருக்கு திருமதி எஸ். கதிரவேலுப்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.

---

## ஞானசம்பந்தர் விழா

கோப்பாய், திங்கள்

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் நாளை நடத்தப்படவிருக்கும் ஸ்ரீ ஞானசம்பந்தர் விழாவில் மேற்படி மன்றத்தின் தேவார வகுப்பு ஆசிரியர் தமிழ்மணி திரு. வி. எஸ். கணேசசுந்தரத்தின் சேவையைப் பாராட்டி அவருக்கு மன்றத்தாரால் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கப்படும்.

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் சொற்பொழிவுகளும் சங்கீதகதாப் பிரசங்கமும் நடைபெறும்.

### இணுவிலில்

உடுவில், திங்கள்

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில் நாளை மாலை திருஞானசம்பந்தர் குருபூசையும மகேஸ்வரபூசையும் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

### கொக்குவிலில்

உடுவில், திங்கள்

கொக்குவில் சனசமூக நிலையத்தில் நாளை திருஞானசம்பந்தர் குருபூசை கொண்டாடப்படவிருக்கிறது.

---

## வீமன்காமம் கல்லூரி பெற்றோர் தினவிழா

அளவெட்டி, திங்கள்

வீமன்காமம் மகாவித்தியாலய வருடாந்த பெற்றோர் தினவிழா இம்மாதம் 29-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

மேற்படி பாடசாலை பெற்றோர் ஆசிரியசங்க ஆதரவில் நடைபெறும் இவ்விழாவில் திரு. சிமான் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

[illegible] பாடசாலை மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

---

## இ. ச. தலைவர் கண்டனம்

உடுவில், திங்கள்

"மாவட்டசபை நகல் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது எதிர்க்கட்சியினர் அம்மசோதா பிரதிகளை தீயிலிட்டுக் கொளுத்தியது தமிழ் மக்களை மிக்க வேதனைக்குள்ளாக்கிய ஒரு செயலாகும். எதிர்க்கட்சியினரின் இந்த வேதனைக்குரிய செயலினால் தமிழ் மக்களுடைய தொடர்புகளையும் தாங்களாகவே துண்டித்துக் கொண்டுவிட்டனர். தமிழ்மொழி உபயோகமசோதா பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது அதனை பகிஷ்கரித்து தமிழ் மக்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொண்டவர்கள் மாவட்டசபை நகல் மசோதாவை எரித்ததன் மூலம் மீதமிருந்த சகல தொடர்புகளையும், நம்பிக்கைகளையும் இழந்துவிட்டார்கள்."

மாவட்டசபை நகல் மசோதாப் பிரதிகளை எதிர்க்கட்சியினர். தீயிலிட்டதைக் கண்டித்து உடுவில் கிராமசபை அக்கிராசனர் திரு. ச. முத்துலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

---

## தாயைக் காப்பாற்ற முயன்றவர் காயமுற்றார்

யாழ்ப்பாணம், செவ்.

சாவகச்சேரி - உஞ்சிலைச் சேர்ந்த எஸ். மகேஸ்வரி என்பவர் தமதுவீட்டிலுள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளும் பொழுது தவறிக் கிணற்றில் விழுந்தபோது இவரைக் காப்பாற்ற கிணற்றுக்குள் குதித்த மகன் பெரும் காயங்களுக்குள்ளானார். இவர் தற்போது யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாயார் எதுவித காயமுமின்றி இருப்பதாகத் தெரிகின்றது. இச்சம்பவம் நேற்று நடைபெற்றது. [ந நி.]

---

## மதுர....

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

லளிதம் ஆகியவற்றை எங்கு கேட்டாலும் உடனே அதில் சொக்கி ரஸித்து, 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்' என்றெண்ணி, அந்த இன்பத்தை பிறருக்கு வாரி வழங்குவார்.

பிற வித்வான்கள் பாடி பிரபலமாகிய பாட்டுக்களை தாங்கள் பாடலாகாதென்று சிலர் செருக்குடன் இருப்பார்கள். ஆனால் மணி ஐயர் அப்படிப் பட்டவரல்ல. தமக்கு குறைந்த வித்வான் எனினும் ஒருவர் பாடியது அவருக்கு பிடித்துக் கொண்டு விட்டதோ உடனே தாமும் அவற்றை மேடைக் கச்சேரிகளிலும் ரேடியோவிலும் பாடத் தொடங்கி விடுவார். ஆனால் அந்த 'மணி முத்திரை' அவற்றில் அலாதியாக பிரகாசிக்கும்.

'கந்தன் கருணை புரியும் வடிவேல்' என்ற பாட்டில் மெட்டு ஓர் இந்தி படப் பாட்டின் மெட்டு என்பது எத்தனை பேருக்கு தெரியும்?

'கான கலாதரர்' பிறிதோர் உலகத்துக்கு போனாலும் அது கந்தர்வ உலகமாய் இருக்குமென்பது நிச்சயம்!

—'வி. என். பி.'—

---



அமரரான ரொபர்ட் கென்னடி

---

## கடை ஊழியர்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொலையும் செய்வாள் பத்தினி; உயிர் கொடுப்பான் தோழன்"

இறந்தவரின் நண்பர் ஒருவர் அண்மையில் சிலாபத்தில் ரயில் முன்பாய்ந்து கொலைசெய்ததாகவும் அன்றிலிருந்து இவர் மனமுடைந்து காணப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இறந்தவர் கொலைசெய்யப்பட்டிருக்கலாமென பொலிசாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

மரணவிசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (கா. நி)

---

## புனிதவளன் விளையாட்டு கழகம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் புனிதவளன் கழகத்திற்கென ஒருநிலையம் இருக்கிறது. கடந்த ஐந்து மாதங்களில் 10 பொதுக்கூட்டங்களும் ஓர் அவசரக்கூட்டமும் நான்கு நிர்வாகசபைக் கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. சிநேகபூர்வமான 10 உதைபந்தாட்ட போட்டிகளில் கலந்துகொண்டு டன் மற்றும் சிறுவர் கழக மெய்வல்லுனர் போட்டி, மல்யுத்தப் போட்டி, குருநகர், சிறுத்தீவு சிரமதான வேலைகள், சிறுத்தீவு பரிஞானசுநாயகி ஆலய வேலைகள், புனிதவளன மாதர்கழக அங்குராரீப்பணம், உடற்கட்டமைப்புப் பயிற்சிவகுப்புகள், நாடகம், [illegible] நிகழ்ச்சி ஆகிய பலதரப்பட்ட பணிகளையும் மேற்கொண்டோம்."

இவ்வாறு யாழ்ப்பாணம் புனிதவளன் விளையாட்டுக் கழக செயலாளர் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன மத வேறுபாடற்ற சகோதரமனப்பான்மையை வளர்த்தல் அதனை அடைவதற்காக சமூகசேவை, விளையாட்டு, கலை ஆகிய துறைகளில் இக்கழகம் கவனம் செலுத்திவருகிறதெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

---

## தலா 150 அபராதம்

கிளிநொச்சி, திங்கள்

ஆனையிறவு உப்பளத்தில் சட்டவிரோதமாக வடிசாராயம் வைத்திருந்ததாக கிளிநொச்சி கலால் பாதுகாப்பு அதிகாரி களினால் இராமையா சிவபாக்கியம் என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கிளிநொச்சி நீதிபதி திரு விக்னராசா எதிரியை குற்றவாளியாகக் கண்டு ரூபா 150 அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

முருகண்டியில் சின்னத்தம்பி தியாகராசா என்பவ சட்டவிரோதமாகப் 10 போத்தல் சாராயம் வைத்திருந்ததாக தாக்கல்செய்யப்பட்ட வழக்கிலும் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட கிளிநொச்சி மாஜிஸ்திரேட் திரு விக்னராசா எதிரிக்கு ரூபா 150 அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

---

## கல்லூரி......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வைபவ ஆரம்பத்தில் மூவரின் புகைப்படத்தையும் கொழும்புஇராமகிருஷ்ணமிஷன் உபதலைவர் சுவாமி பிரேமானந்தாஜி திரை நீக்கம் செய்துவைத்தார்.

திரு பேரின்பநாயகம் மேலும்பேசுகையில தெரிவித்ததாவது:—

கலைப்புலவர் நவரத்தினத்தின் நல்ல பண்புகளைப் பின்பற்றிய இவர்கள் புகழ் வைத்தில்வரா க்கல்லூரியுடன் நிற்கவில்லை அதற்கப்பால் சென்றுள்ளது.

ஓலைக்கொட்டிலாக இருந்த பாடசாலையை அமைத்துக் கட்டடமாக்கிய பெருமை திரு அம்பிகைபாகனைச் சாரும். எடுத்த வேலையை திறம்படமுடிக்கும் திரு. வைரமுத்து. திரு. சினிவாசகம் ஆகியோருடைய பக்கதுணை இதனை [illegible].

திரு. பேரின்பநாயகம் ஸ்ரீராமகிருஷ்ணமிஷனுக்கும் நன்றிதெரிவித்தார்.

பழைய மாணவரான ஜனாப் மக்பூல் பேசுகையில் மாணவர்களுக்கு சேவை செய்யும் சேவர்களாக மூன்று ஆசிரியர்களும் இருந்தனர் என்றார்.

திரு எஸ். ஆர். கனகநாயகம், ஜனாப் என். சேக்தம்பி, திரு. இராஜநாயகம் ஆகியோரும் பாராட்டிப் பேசினர்.

திரு க. அம்பிகைபாகன் பாராட்டுதல்களுக்கு நன்றி தெரிவிக்கையில் தமிழுக்கும் சைவத்துக்கும் தாம் தொடர்ந்து சேவை செய்யபோவதாகக் கூறினார்.

கல்லூரி வளர்ச்சிக்கு ஆசிரியருடன் பெற்றோர், மாணவர் ஆகியோரும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

திரு க. வைரமுத்து, திரு. து. சினிவாசகம் ஆகியோரும் நன்றி கூறினார்கள் (ந. நி)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பிலங்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம் திகதி [illegible] டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org